# 9th Tamil Questions - Part 6 [New Book]

1. " சுள்ளியம் **பேரியாற்று** வெண்ணுரை கலங்க
   யவனர் தந்த வினைமான் நன்கலம் "
   என்னும் பாடலடி இடம்பெற்றுள்ள நூல்
   அ) புறநானூறு **ஆ) அகநானூறு**
   இ) கலித்தொகை ஈ) மணிமேகலை
2. அரேபியர் சேரநாட்டு மிளகை கொண்டு போய் விற்ற இடங்கள் எவை
   அ) செங்கடல் துறைமுகம், ரோம் நகர துறைமுகம்
   **ஆ) செங்கடல் துறைமுகம், அலெக்சாண்டிரியா துறைமுகம்**
   இ) ரோம் நகர துறைமுகம், அலெக்சாண்டிரியா துறைமுகம்
   ஈ) எகிப்து, ரோம் நகர துறைமுகம்
3. முசிறி துறைமுகத்தில் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் அல்லாதது எது ?
   அ) பவளம் ஆ) செம்பு
   இ) கண்ணாடி **ஈ) இரும்பு**
4. கிளியோபாட்ரா கொற்கை முத்தை அணிந்ததாக பதிவு செய்துள்ளவர் யார்?
   அ) மார்க்கோபோலோ **ஆ) பிளினி**
   இ) யுவான்சுவாங் ஈ) சாணக்கியர்
5. கீழ்க்கண்டவற்றுள் கொற்கை முத்தின் சிறப்பினை குறிப்பிடும் நூல் எது ?
   **அ) அர்த்தசாஸ்திரம்** ஆ) வர்ணசாஸ்திரம்
   இ) வானசாஸ்திரம் ஈ) மகாபாரதம்
6. திசையை அறிய பயன்படும் காந்தவூசி பற்றிய செய்தி எந்நூலில் உள்ளது ?
   அ) சிலப்பதிகாரம் **ஆ) மணிமேகலை**
   இ) வளையாபதி ஈ) குண்டலகேசி
7. கீழ்க்கண்டவற்றுள் கிழக்கு கடற்கரை துறைமுகங்களில் அல்லாதது எது ?
   1. மருங்கை 2. எயிற்பட்டினம் 3. அரிக்கமேடு
   4. நறவு 5. மாந்தை

   அ) 1,5 ஆ) 1,4, 5 **இ) 4, 5** ஈ) 4 மட்டும்

   **(விளக்கம் : நறவு, மாந்தை ஆகியவை மேற்குக் கடற்கரை பகுதியில் புகழ் பெற்று விளங்கிய துறைமுகம்)**
8. கீழ்க்கண்டவற்றுள் மேற்கு கடற்கரை பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகம் எது ?

**அ) வைக்கரை** ஆ) மருங்கை

இ) கொற்கை ஈ) கொல்லந்துரை

**(விளக்கம் : மேற்கு கடற்கரை பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகங்கள் மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, விழிஞ்ம்)**

9. மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலக்குமிடத்தில் இயற்கையாக உருவான துறைமுகம் எது?

அ) நறவு ஆ) மாந்தை

இ) வைக்கரை **ஈ) முசிறி**

10. முசிறி – அலெக்சாண்டிரியா ஒப்பந்தம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது

**அ) தமிழ் – கிரேக்க வணிகர்கள்**

ஆ) தமிழ் – உரோமானிய வணிகர்கள்

இ) தமிழ் – சீன வணிகர்கள்

ஈ) தமிழ் – யவன வணிகர்கள்

11. முசிறி – அலெக்சாண்ட்ரியா ஒப்பந்தம் ஏற்பட்ட காலம்

அ) பொ.ஆ.பி 130 ஆ) பொ. ஆ. மு. 130

**இ) பொ.ஆ.பி. 150** ஈ) பொ. ஆ.மு. 150

12. " பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம் " எனும் வரி இடம்பெற்றுள்ள நூல்

அ) அகநானூறு **ஆ) பதிற்றுப்பத்து**

இ) புறநானூறு ஈ) கலித்தொகை

13. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. பந்தர் பெயரிய பேரிசை மூதூர் – பாடல் 67, அடி 2
2. பந்தர் பயந்த பலர்புகழ் முத்தம் - பாடல் 74, அடி 6
3. நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர் – பாடல் 55, அடி 4

அ) 3 மட்டும் சரி ஆ) 3 மட்டும் தவறு

**இ) அனைத்தும் சரி** ஈ) அனைத்தும் தவறு

14. காவிரிப்பூம்பட்டினம் எத்தனை கூறுகளாக பிரிக்கப்பட்டிருந்தது ?

**அ) இரண்டு** ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து

15. காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் ____ கரையில் காவிரிப்பூம்பட்டினம் இருந்தது .

**அ) வடகரை** ஆ) தென்கரை

இ) துறைமுகம் ஈ) பட்டினப்பாக்கம்

16. காவிரிப்பூம்பட்டினத்தின் இரண்டு கூறுகள் எவை ?

அ) வடகரை, தென்கரை ஆ) பட்டினப்பாக்கம், முத்துப்பாக்கம்

இ) மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாலை **ஈ) பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம்**

17. துறைமுகத்தின் செயல்திறனை கணக்கிடுவதற்கு தற்போது பயன்படுத்தும் முறை _____ .

**அ) ஒற்றைச் சாளர முறை** ஆ) இரட்டை வழிப் பாதை

இ) ஏற்றுமதி, இறக்குமதி ஈ) கப்பல்களின் எண்ணிக்கை

18. காவிரி பூம்பட்டின துறைமுகங்களில் பொருள்களுக்கு சுங்கத்தீர்வைகள் வசூலிக்கப்பட்டன என தெரிவிக்கும் நூல்

அ) புறனாநூறு **ஆ) பட்டினப்பாலை**

இ) பதிற்றுப்பத்து ஈ) கலித்தொகை

19. புகார் நகரத்தில், சுங்கத் தீர்வை பெற்றுக் கொண்டு புலிச்சின்னம் அடையாளம் வைத்த பொருள்கள், ஏற்றுமதி செய்ய மலைபோல் குவிந்திருந்தன என கூறும் பட்டிப்பாலை அடிகள் எவை ?

அ) அடி 125 – 134 ஆ) அடி 145 – 152

இ அடி 120 – 135 **ஈ) அடி 124 – 135**

20. கோவலன் ,கண்ணகி, மாதவி, மணிமேகலை முதலானோர் ____ ஆட்சிக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனர் .

அ) நலங்கிள்ளி ஆ) நெடுங்கிள்ளி

**இ) கிள்ளிவளவன்** ஈ) நெடுஞ்செழியன்

21. கீழ்க்கண்டவற்றள் காவிரி பூம்பட்டினத்தில் வணிகத்தில் ஈடுபடாதவர்கள் யார் ?

அ) சாவகர்கள் **ஆ) சீனர்கள்**

இ) யவனர்கள் ஈ) வட இந்தியர்கள்

22. சோழ நாட்டு வணிகர்கள் வணிகம் செய்த இடங்கள் எவை ?

**அ) சாவக நாடு ,காழகம், கங்கை துறைமுகம்**

ஆ) எகிப்து, காழகம், கங்கை துறைமுகம்

இ) சீனா, காழகம், எகிப்து

ஈ) சீனா, காழகம், கங்கை துறைமுகம்

23. முசிறி துறைமுகத்தில் ______ ஏற்றுமதி சிறப்பு பெற்றிருந்தது .

அ) முத்து ஆ) தந்தம்

இ) பொன் **ஈ) மிளகு**

24. கீழ்க்கண்டவற்றுள் ' யவனப்பிரியா ' என்பது _____ .

அ) முத்து ஆ) தந்தம்

இ) பொன் **ஈ) மிளகு**

25. மிளகிற்கு மாற்றாக யவனர்கள் தந்த பொருள் எது ?

**அ) பொன்** ஆ) தந்தம்

இ) வெள்ளி ஈ) வைரம்

26. கீழ்க்கண்டவற்றுள் ' பந்தர் ' என்பதன் பொருள் ______ .

அ) அரச வீதி ஆ) வணிகர்கள் வீதி

**இ) கடைவீதி** ஈ) அந்தணர்கள் வீதி

27. தீழ்க்கண்டவற்றுள் சேரர்களின் புகழ்பெற்ற துறைமுகம் எது ?

**அ) முசிறி** ஆ) கொற்கை

இ) காவிரி பூம்பட்டினம் ஈ) தொண்டி

28. கீழ்க்கண்டவற்றுள் பேரியாறு உருவான மலை எது ?

**அ) மேற்கு தொடர்ச்சி மலை** ஆ) கிழக்கு தொடர்ச்சி மலை

இ) இமயமலை ஈ) ஆரவல்லி மலை

29. தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் மேற்குக்கரையில் அமைந்த துறைமுகம் எது ?

அ) முசிறி **ஆ) கொற்கை**

இ) தொண்டி ஈ) காவிரிப்பூம்பட்டினம்

30. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாக விளங்கிய இடம் எது?

**அ) கொற்கை** ஆ) முசிறி

இ) தொண்டி ஈ) காவிரிப்பூம்பட்டினம்

31. பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறந்த பின் அறியணை ஏறியவர் யார்?

அ) அதிவீரராம பாண்டியன் ஆ) சடையவர்மன் வீரபாண்டியன்

இ) வீரகேசரி **ஈ) வெற்றிவேற்செழியன்**

32. பாண்டிய வம்சத்தில் ஆளும் மன்னரை அடுத்து அரசாளும் இளவரசர்கள் எந்நகரில் தங்கி நிருவாகம் கற்றனர்

**அ) கொற்கை** ஆ) முசிறி

இ) தொண்டி ஈ) காவிரி பூம்பட்டினம்

33. " மாலை திங்கள் வழியோன் ஏறினான் " எனும் பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

அ) பட்டினப்பாலை ஆ) பதிற்றுப்பத்து

**இ) சிலப்பதிகாரம்** ஈ) மணிமேகலை

34. " கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் " என்பது சிலப்பதிகாரத்தின் எந்த காதையிலுள்ள பாடலடி

அ) வழக்குரை காதை ஆ) வரந்தரு காதை

இ) மங்கல வாழ்த்துப்பாடல் **ஈ) நீர்ப்படைக் காதை**

35. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் - அடி 127
2. மாலைத் திங்கள் வழியோன் ஏறினன் - அடி 134
3. மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின் - அடி 138

**அ) 1 மட்டும் சரி** ஆ) 2, 3 சரி

இ) அனைத்தும் சரி ஈ) அனைத்தும் தவறு.

**( விளக்கம் : 2.மாலைத் திங்கள் வழியோன் ஏறினன் - அடி 138**

**3.மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின் - அடி 134)**

36. கொற்கை துறைமுகத்தில் செல்வர் ஏறி வரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக் கொள்ளும் அளவிற்கு கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்ததாக கூறும் நூல்

அ) புறநானூறு **ஆ) அகநானூறு**

இ) சிலப்பதிகாரம் ஈ) பட்டினப்பாலை

37. ' வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர் ' என்பது எந்நூலில் உள்ள பாடலடி

அ) புறநானூறு **ஆ) அகநானூறு**

இ) சிலப்பதிகாரம் ஈ) பட்டினப்பாலை

38. " திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர் நடைப்புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை " என்ற பாடலை பாடியவர் யார்

**அ) அகநானூறு – வெண்கண்ணனார்** ஆ) புறநானூறு – வெண்கண்ணனார்

இ) சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள் ஈ) அகநானூறு – இளங்கோவடிகள்

39. கொற்கையில் ஆடவர்கள் முத்துக் குளிக்கவும், வலம்புரி சங்கு எடுக்கவும் கடலில் மூழ்கினர் என கூறும் அகநானூற்றின் பாடல்

அ) 300 வது பாடல் ஆ) 530 வது பாடல்

**இ) 350 வது பாடல்** ஈ) 325 வது பாடல்

40. இராமநாதபுரம் அழகன் குளத்தில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடு எக்காலத்திற்கு முற்பட்டது

**அ) 1000 ஆண்டுகள்** ஆ) 2000 ஆண்டுகள்

இ) 3000 ஆண்டுகள் ஈ) 4000 ஆண்டுகள்

41. பொருத்துக

| | |
|---|---|
| 1. வடமலை | i) பொன், மணிக்கற்கள் |
| 2. மேற்கு மலை | ii) சந்தனம், ஆரம் |
| 3. தென்கடல் | iii) முத்து |
| 4. கீழ்க்கடல் | iv) பவளம் |
| 5. தரைவழி | v) கறி |

அ) iii i ii v iv

ஆ) iii ii i iv v

இ) ii i iii v iv

**ஈ) i ii iii iv v**

42. கொற்கை துறைமுகத்தில் பொருள்கள் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக் கொள்ளும் அளவிற்கு கரையோரங்களில் குவிந்திருந்தன எனும் செய்தி அகநானூற்றின் எத்தனையாவது பாடலில் இடம்பெற்றுள்ளது

**அ) 130** ஆ) 310 இ) 131 ஈ) 132

43. பொ.ஆ.பி முதல் நூற்றாண்டில் யவனர் – தமிழர் வணிகத்தை விரிவுப்படுத்தியவர் யார் ?

அ) ஹிப்பல்ஸ் **ஆ) அகஸ்தஸ் சீஸர்**

இ) நெடுஞ்செழியன் ஈ) யவனர்

44. கொற்கை அகழாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் சார்ந்த காலம்

அ) இரும்பு காலம் ஆ) உலோகக்காலம்

இ) செம்பு கற்காலம் **ஈ) பெருங்கற்காலம்**

45. " சங்ககாலம் முதல் பிற்கால பாண்டியர் காலம் வரை பாண்டிய நாட்டு முத்துக்களை உரோம் நகரத்தினர் விரும்பி வாங்கினர்" என்று கூறிய வரலாற்று அறிஞர்

அ) அகஸ்டஸ் **ஆ) ஸ்டிராபோ**

இ) ஹிப்பல்ஸ் ஈ) சீஸர்

46. பாண்டிய மன்னர்கள் அகஸ்டஸ் மன்னன் அரசவைக்கு பரிசாக அளித்த பொருள் எது?

அ) வலம்புரி சங்கு ஆ) வைரம்

**இ) முத்து** ஈ) பவளம்

47. பாண்டிய மன்னனின் குதிரைப்படைக்காக
எத்தனை அரேபியக் குதிரைகள் ஆண்டுதோறும் கொற்கை துறைமுகத்தில் வந்திறங்கின .

அ) 15,000 ஆ) 14,000 இ) 17,000 **ஈ) 16,000**

48. பாண்டிய நாட்டு நாணயங்களை அச்சிடுவதற்கான பட்டறைகள் நிறைந்த தெருவின் பெயர் _____ .

**அ) அஃகசாலை** ஆ) எஃகு சாலை

இ) நாணயசாலை ஈ) பட்டறை சாலை

49. பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் வழியை கண்டறிந்தவர் யார் ?

அ) அகஸ்தஸ் ஆ) ஸ்டிரோபா

**இ) ஹிப்பல்ஸ்** ஈ)சீஸர்

50. _____ பருவக்காற்று வழியாக யவனக் கடல் வணிகம் பெருகியது.

அ) வியாபாரக்காற்று ஆ) தென் மேற்கு பருவக்காற்று

இ) வடகிழக்கு பருவக்காற்று **ஈ) ஹிப்பலஸ் காற்று**

51. ______ அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட நாணய புதையல்கள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன.

அ) எகிப்திய ஆ) யவனர்

**இ) உரோமபுரி** ஈ) சீனர்

52. கீழ்க்கண்ட பாடல் வரிகளை ஆராய்க .

1. சுள்ளியம் பேர்யாற்று வெண்னுரை கலங்க – அகநானூறு
2. நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர் – பதிற்றுப்பத்து
3. மாலைத் திங்கள் வழியோன் ஏறினான் – சிலம்பு
4. பொன்னொடு வந்து கறியொடு பெயரும் – அகநானூறு

அ) அனைத்தும் தவறு ஆ) 1, 3, 4 சரி

இ) 3, 4 சரி **ஈ) அனைத்தும் சரி**

53. மதுரை குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளில் எது தவறானது

1. தமிழகத்தின் தொன்மையான நகரம் .
2. இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வரும் நகரங்களுள் ஒன்று .
3. கௌடில்யர், கிரேக்க தூதர் மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டு பயணிகளால் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்கது.
4. செவ்விலக்கியத்தின் தலைநகராக திகழ்கிறது .

அ) 3, 4 ஆ) 2, 4

இ) 3 மட்டும் **ஈ) எதுவுமில்லை**

**(விளக்கம்: கௌடில்யர் – பொ.ஆ.மு.370**

**மெகஸ்தனிஸ் - பொ.ஆ.மு.350)**

54. “ எல்லா இனமும் மதமும் உண்டு – இங்கு

இறையருள் ஆலயம் ஏகமுண்டு!

பல்லாயிரம் ஆண்டு வரலாறு – இதைப்

பாடாத நாவில்லை பண்பாடு! "

என்ற பாடலில் சிறப்பிக்கப்படும் நகரம்

அ) தஞ்சாவூர் ஆ) கும்பகோணம்

**இ) மதுரை** ஈ) திருச்சி

55. இலக்கணக் குறிப்புத் தருக .

செங்கோல், பேரழகு

அ) வினைத் தொகை **ஆ) பண்புத்தொகை**

இ) உவமை தொகை ஈ) உம்மை தொகை

**(விளக்கம் : இரு சொற்களுக்கிடையில் 'மை' விகுதி தொக்கி வருவது பண்புத்தொகை எனப்படும்)**

56. இலக்கணக் குறிப்புத் தருக

எழுந்த, பாடு

**அ) பெயரெச்சம், ஏவல்வினைமுற்று** ஆ) வினையெச்சம், பெயரெச்சம்

இ) வினைத் தொகை, பெயரெச்சம் ஈ) வினையெச்சம், ஏவல்வினைமுற்று

**(விளக்கம் : பெயரெச்சம் என்பது பெயர்ச்சொல்லை ஏற்று முடிவு பெறும் எச்சவினைச்சொல் ஆகும்.**

- **முன்னிலையில் ஒருவனை, ஒருத்தியை அல்லது ஒன்றினை ஆணையிட்டு ஏவும் வினையே ஏவல் வினைமுற்று என்பதாகும்.இது எதிர்காலத்தைக் காட்டி வரும். ஒருமை, பன்மையை உணர்த்தும்.)**

57. இலக்கணக் குறிப்புத் தருக – பாடாத

அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் **ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்**

இ) வினைத்தொகை ஈ) ஏவல்வினை முற்று

**(விளக்கம் : எதிர்மறைப் பெயரெச்சம் காலம் காட்டுவதில்லை. முக்காலத்திற்கும் பொதுவானதாக அமையும்.)**

58. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – வாழ்ந்திருக்கும்

அ) வாழ்ந்து + இருக்கும் ஆ) வாழ்ந்து + இரு + க் + க் + உம்

**இ) வாழ்ந்திரு + க் + க் + உம்** ஈ) வாழ்ந்திரு + க் + உம்

59. " வாழ்ந்திருக்கும் → வாழ்ந்திரு + க் + க் + உம் " இதில் ' க்+க் ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) சந்தி, எதிர்மறை இடைநிலை **ஆ) சந்தி, எதிர்கால இடைநிலை**

இ) எதிர்கால இடைநிலை, சந்தி ஈ) சந்தி, இறந்தகால இடைநிலை

60. சிந்து என்னும் பாவகை _____ பாடல் அமைப்பிலிருந்து தோன்றியது .

அ) தெம்மாங்கு ஆ) ஆனந்தகளிப்பு

இ) சந்தப் பாடல் **ஈ) நாட்டுப்புறப் பாடல்**

**( விளக்கம் : சிந்து என்பது ஓசைநயத்துடன் பாடக் கூடிய பாவகை .)**

61. சிந்து வகை பாடல்கள் ______,______ அமைந்த கண்ணிகளை கொண்டவை .

அ) இலக்கணம், சந்தம் ஆ) பாவகை, இலக்கணம்

**இ) சந்தம், இயைபுத் தொடை** ஈ) சந்தம், பாவகை

62. கீழ்க்கண்டவற்றுள் எந்த வகை பாடல் வடிவங்கள் சிந்து பாவகை வழக்கிலிருந்த காலத்தில் புதிய பாவடிவங்களாக தோன்றின .

1. ஆனந்தக்களிப்பு 2 . தெம்மாங்கு 3. வழிநடைச் சிந்து

4. நொண்டிச்சிந்து 5. கும்மிப் பாடல்கள்

**அ) அனைத்தும்** ஆ) 1, 2 இ) 1, 2, 5 ஈ) 3, 4

**(விளக்கம் : காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, நொண்டிச் சிந்து போன்றவை சந்தப்பாடல்கள்.ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு முதலியவை நாட்டுப் பாடல் வடிவங்கள்)**

63. ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது _____ பாவகை ஆகும் .

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

**இ) சிந்து** ஈ) கலிப்பா

64. கீழ்க்கண்டவர்களுள் சிந்து வகையினை அதிகமாக கையாண்டவர் யார் ?

**அ) பாரதியார்** ஆ) பாரதிதாசன்

இ) கடுவெளி சித்தர் ஈ) கம்பர்

65. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது ?

1. சிந்து என்பது இசைத்தமிழ்ப் பாகுபாடுகளில் ஒன்று .
2. பல்லவி, அனுப்பல்லவி, இன்றி சரணங்களுக்குரிய கண்ணிகளுடன் உடைய பாக்கள் சில வகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.
3. சித்தர் பாடல்கள் பல சிந்து வகையில் அமைந்துள்ளன.

**அ) அனைத்தும் சரி** ஆ) 1, 2 சரி

இ) 1, 3 சரி ஈ) 2, 3 சரி

66. "பாபம் செய்யாதிரு மனமே " என்னும் சிந்து வகைப் பாடல் யாருடையது ?

அ) திருமூலர் ஆ) அகத்தியர்

**இ) கடுவெளிச் சித்தர்** ஈ) தொல்காப்பியர்

67. ' சிந்துக்குத் தந்தை ‘ என போற்றப்படுபவர் யார் ?

**அ) பாரதியார்** ஆ) பாரதிதாசன்

இ) கடுவெளி சித்தர் ஈ) கம்பர்

68. சரியான இணையைத் தேர்ந்தெடு

1. பல்லவி – எடுப்பு
2. அனுபல்லவி – தொடுப்பு
3. சரணம் – முடிப்பு

**அ) அனைத்தும் சரி** ஆ) 1, 2 சரி

இ) 1, 3 சரி ஈ) 2, 3 சரி

69. மதுரைக் காஞ்சி என்பது எவ்வகை நூல்களுள் ஒன்று ?

அ) பதினெண் கீழ்க்கணக்கு **ஆ) பதினெண் மேற்கணக்கு**

இ) சிந்துப் பாடல் ஈ) எட்டுத்தொகை

70.“ பாரதி போதிச்ச பாடசாலை – திருப்
பரங்குன்ற முருகன் நின்னசோலை "
என்ற வரிகள் எந்த கவிதையில் இடம்பெற்றுள்ளன

அ) மதுரைக் காஞ்சி **ஆ) நான்மாடக்கூடல்**

இ) காவடிச் சிந்து ஈ) நொண்டிச்சிந்து

71.மதுரைக் காஞ்சியில் கீழ்க்கண்ட எந்தெந்த காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன .

1. கோட்டை கொத்தளம் 2. திருவிழாக்கள்
3. பலவகைப் பள்ளிகள் 4. நாற்பெருங்குழு
5. அந்தி வணிகம்

**அ) அனைத்தும்** ஆ) 1, 3, 5

இ) 2, 3 ஈ) 1, 2, 3

72."மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்உற ஓங்கிய பல் படைப்புரிசைத் தொல்வலி நிலைஇய "
என்னும் வரிகளை இயற்றியவர் யார் ?

அ) பாரதியார் ஆ) கடுவெளி சித்தர்

**இ) மாங்குடி மருதனார்** ஈ) பாரதிதாசன்

73." ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப”
இவ்வரிகள் எந்நூலில் இடம்பெற்றுள்ளன ?

அ) நான்மாடக்கூடல் **ஆ) மதுரைக் காஞ்சி**

இ) பதிற்றுப்பத்து ஈ) புறநானூறு

74." பொறிமயிர் வாரணம் …
கூட்டுறை வயமாப் புலியொடு குழும "
என்ற வரிகள் மதுரையில் _______ இருந்ததை உணர்த்துகின்றன .

அ) வாரணங்கள் ஆ) புலிகள்

இ) மாடங்கள் **ஈ) வனவிலங்கு சரணாலயம்**

75.மதுரையில் வனவிலங்கு சரணாலயம் இருந்த செய்தியை கூறும் மதுரைக் காஞ்சியின் அடிகள் ______ .

அ) 637 – 639 ஆ) 693 – 697

**இ) 673 – 677** ஈ) 637 – 677

76. பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலை இயற்றியவர் யார் ?

அ) இராசவேல் **ஆ) இராசமாணிக்கனார்**

இ) இராசேந்திரன் ஈ) அரவிந்த் குப்தா

77. சரியான பொருளை தேர்ந்தெடு

புரிசை, பணை

அ) மதில், பனைமரம் ஆ) சாளரம், பனைமரம்

இ) நீர்நிலை ,சாளரம் **ஈ) மதில், முரசு**

78. சரியான பொருளை தேர்ந்தெடு

சில்காற்று, மாகால்

அ) பெருங்காற்று, புயல் ஆ) தென்றல், புயல்

**இ) தென்றல், பெருங்காற்று** ஈ) தென்றல், சாளரம்

79. சரியான பொருளை தேர்ந்தெடு

முந்நீர், கயம்

அ) மூன்று வகையான நீர், கடல் **ஆ) கடல், நீர்நிலை**

இ) கடல்,முரசு ஈ) கடல், சாளரம்

80. சரியான பொருளை தேர்ந்தெடு

அணங்கு, புழை அ) ஒழுங்கு, சாளரம்

ஆ) தெய்வம், மதில் **இ) தெய்வம், சாளரம்**

ஈ) மதில், சாளரம்

81. சரியான பொருளை தேர்ந்தெடு

ஓவு, நியமம்

அ) ஓய்வு, நியமனம் ஆ) ஓய்வு, அங்காடி

**இ) ஓவியம், அங்காடி** ஈ) ஓவியம், நியமனம்

82. இலக்கணக் குறிப்புத் தருக

நெடுநிலை, முந்நீர்

அ) வினைத் தொகை **ஆ) பண்புத்தொகை**

இ) உவமை தொகை ஈ) உம்மை தொகை

**(விளக்கம் : இரு சொற்களுக்கிடையில் 'மை' விகுதி தொக்கி வருவது பண்புத்தொகை எனப்படும்)**

83. இலக்கணக் குறிப்புத் தருக

முழங்கிசை, இமிழிசை

**அ) வினைத் தொகை** ஆ) பண்புத்தொகை

இ) உவமை தொகை ஈ) உம்மை தொகை

**(விளக்கம் : வினைத் தொகை என்பது மூன்று கால வினைகளையும் தொகுத்து ஒரு சேரக் குறிக்குமாறு வரும் பெயர்ச்சொல் ஆகும். இச்சொல் முக்காலத்தையும் உணர்த்தும் .)**

84. இலக்கணக் குறிப்புத் தருக – மகிழ்ந்தோர்

**அ) வினையாலணையும் பெயர்** ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்

இ) வினைத்தொகை ஈ) ஏவல்வினை முற்று

**(விளக்கம் : வினைமுற்று, வினைசெய்த கருத்தாவைக் குறிக்க வருவது வினையாலணையும் பெயர் ஆகும்.)**

**85.** இலக்கணக் குறிப்புத் தருக – மாகால்

**அ) உரிச்சொல் தொடர்** ஆ) பண்புத்தொகை

இ) உவமை தொகை ஈ) ஏவல்வினை முற்று

**(விளக்கம் : ஒன்றை பெரிது படுத்திக் காட்டுவது உரிச்சொற்றொடர் ஆகும்.சால, உறு, தவ, நனி, கூர், கழி, கடி, மா, தட ஆகியவை உரிச்சொற்களாக வரும்)**

86. இலக்கணக் குறிப்புத் தருக – ஓங்கிய, வாயில்

அ) பெயரெச்சம், ஏவல்வினைமுற்று ஆ) வினையெச்சம், பெயரெச்சம்

**இ) பெயரெச்சம், இலக்கணப் போலி** ஈ) வினையெச்சம், ஏவல்வினைமுற்று

**(விளக்கம் : பெயரெச்சம் என்பது பெயர்ச்சொல்லை ஏற்று முடிவு பெறும் எச்சவினைச்சொல் ஆகும்.**

87. இலக்கணக் குறிப்புத் தருக

நிலைஇய, குழாஅத்து

அ) செய்யுளிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

**ஆ) சொல்லிசை அளபெடை, செய்யுளிசை அளபெடை**

இ) எதிர்மறைப் பெயரெச்சம், செய்யுளிசை அளபெடை

ஈ) பெயரெச்சம், சொல்லிசை அளபெடை

**(விளக்கம் : செய்யுளிசை அளபெடை செய்யுளில் இசையைக் கூட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.**

- **ஒரு பெயர்ச் சொல்லை வினை எச்சமாக மாற்றுவது சொல்லிசை அளபெடை எனப்படும்)**

88. பகுபத உறுப்புகளாகப் பிரித்து எழுதுக – ஆழ்ந்த

அ) ஆழ்ந்து + அ ஆ) ஆழ் + த் + அ

**இ) ஆழ் + த்(ந்) + த் + அ** ஈ) ஆழ் + ந் + அ

89. பகுபத உறுப்புகளாகப் பிரித்து எழுதுக – ஓங்கிய

அ) ஓங்கு + இய ஆ) ஓங்கு + இ + அ

இ) ஓங்கு + ய் + அ **ஈ) ஓங்கு + இ(ன்) + ய் + அ**

90. பகுபத உறுப்புகளாகப் பிரித்து எழுதுக – மகிழ்ந்தோர்

அ) மகிழ்ந்து + ஓர் ஆ) மகிழ்ந்து +ய் + ஓர்

**இ) மகிழ்+த்(ந்) +த் + ஓர்** ஈ) மகிழ் + த் + ஓர்

91.' ஆழ்ந்த ' என்ற சொல்லின் பகுபத உறுப்புகளில் ' அ ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) வினையெச்ச விகுதி **ஆ) பெயரெச்ச விகுதி**

இ) ஒன்றன்பால் வினைமுற்று விகுதி ஈ) பலர்பால் வினை முற்று விகுதி

**(விளக்கம் : பெயரெச்ச விகுதிகள் – அ, (உம்))**

92.' ஓங்கிய 'என்ற சொல்லின் பகுபத உறுப்புகளில் ' ய் ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) சந்தி ஆ) சாரியை

**இ) உடம்படுமெய்** ஈ) இறந்தகால இடைநிலை

93.' மகிழ்ந்தோர் 'என்ற சொல்லின் பகுபத உறுப்புகளில் ' ஓர் ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

**அ) பலர்பால் வினைமுற்று விகுதி** ஆ) ஆண்பால் வினைமுற்று விகுதி

இ) பெண்பால் வினைமுற்று விகுதி ஈ) ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

**(விளக்கம் : பலர்பால் வினைமுற்று விகுதிகள் - அர், ஆர், ப, மார்)**

94.மதுரைக் காஞ்சி மொத்தம் எத்தனை அடிகளைக் கொண்டது ?

அ) 872 **ஆ) 782** இ) 354 ஈ) 534

95.மதுரைக் காஞ்சியிலுள்ள பாடல்களில் எத்தனை அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன?

அ) 872 ஆ) 782 **இ) 354** ஈ) 534

96.மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார் ?

அ) சேரன் செங்குட்டுவன்

ஆ) இளம்பெருவழுதி

**இ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்**

ஈ) நலங்கிள்ளி

97.மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் யார் ?

அ) கணிமேதாவியர் **ஆ) மாங்குடி மருதனார்**

இ) ஔவையார் ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்

**(விளக்கம் : மாங்குடி மருதனார் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்)**

98.மாங்குடி மருதனார் எட்டுத்தொகையில் எத்தனை பாடல்களைப் பாடியுள்ளார்?

அ) 11 ஆ) 12 **இ) 13** ஈ) 14

99.கீழக்கண்ட கூற்றுகளுள் சரியானது எது ?

1. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று மதுரைக் காஞ்சி .
2. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள் .

3. மதுரையின் சிறப்புகளை பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக் காஞ்சி எனப்பட்டது .
4. இதை 'பெருகுவள மதுரைக்காஞ்சி ' எனவும் அழைக்கப்படுகிறது .

அ) அனைத்தும் சரி **ஆ) 2, 3, 4 சரி**
இ) 1, 3, 4 சரி ஈ) 3, 4 சரி

**(விளக்கம் : பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக் காஞ்சி .)**

100. கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது ?
1. மால் என்பதன் தமிழ்ச் சொல் பல்லங்காடியகம் .
2. பகலில் செயல்படும் கடை வீதிகள் ' நாளங்காடி ' எனப்படும் .
3. இரவில் செயல்படும் கடை வீதிகள் ' அல்லங்காடி ' எனப்படும் .

**அ) அனைத்தும் சரி** ஆ) 2, 3 சரி
இ) 2, 3 தவறு ஈ) 1, 3 சரி

**(விளக்கம் : நாள் – பகல், அல் – இரவு)**

101. உள்ளூர்த் தேவைக்கு ஏற்றார் போல், அங்கு விளைகிற உணவுப் பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கும் சிறு வணிக செயல்பாடு ____ எனப்படும் .

அ) சந்தை **ஆ) கிராமச் சந்தை**
இ) வியாபாரம் ஈ) சிறு வியாபாரம்

102. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளிச் சந்தை எத்தனை கடைகளுடன் எவ்வளவு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

அ) 1000, 18 ஏக்கர் ஆ) 8000, 81 ஏக்கர்
**இ) 8000, 18 ஏக்கர்** ஈ) 1000, 81 ஏக்கர்

103. போச்சம்பள்ளிச் சந்தை வாரந்தோறும் எந்தக் கிழமைகளில் கூடுகிறது ?

அ) சனி **ஆ) ஞாயிறு**
இ) திங்கள் ஈ) செவ்வாய்

104. போச்சம்பள்ளிச் சந்தை எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது ?

அ) 152 ஆ) 251 **இ) 125** ஈ) 215

**(விளக்கம் : இச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது .)**

105. தவறான இணையைத் தேர்ந்தெடு .

அ) மணப்பாறை – மாட்டுச்சந்தை ஆ) அய்யலூர் – ஆட்டுச்சந்தை
இ) ஒட்டன்சத்திரம் – காய்கறிச்சந்தை **ஈ) நாகர்கோவில் தோவாளை - கருவாட்டுச் சந்தை**

**( விளக்கம் : நாகர்கோவில் தோவாளை – பூச்சந்தை)**

106. சரியான இணையைத் தேர்ந்தெடு .

1. ஈரோடு – ஜவுளிச்சந்தை
2. காராமணி குப்பம் (கடலூர்) - கருவாட்டுச் சந்தை
3. நாகப்பட்டினம் - மீன் சந்தை

**அ) அனைத்தும் சரி** ஆ) 1, 2 சரி

இ) 2, 3 சரி ஈ) 1, 3 சரி

107. சரியான இணையை தேர்ந்தெடு .

1. ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும் .
2. தொல்காப்பியர் ஆகுபெயர்களை பதினைந்தாகவும் நன்னூலார் ஏழாகவும் வகைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர் .

அ) அனைத்தும் சரி **ஆ) 1 மட்டும் சரி**

இ) 2 மட்டும் சரி ஈ) இரண்டும் தவறு

**(விளக்கம் : தொல்காப்பியர் ஆகுபெயர்களை ஏழாகவும் நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர் .)**

108. ‘ முல்லையைத் தொடுத்தாள் ‘ எவ்வகை ஆகுபெயர்

**அ) பொருளாகு பெயர்** ஆ) இடவாகு பெயர்

இ) காலவாகு பெயர் ஈ) சினையாகுபெயர்

**(விளக்கம் : முதற் பொருளாகிய முல்லைக் கொடி, அதன் சினையாகிய பூவுக்கு ஆகி வந்தது.)**

109. ' வகுப்பறை சிரித்தது ‘ எவ்வகை ஆகுபெயர்

அ) பொருளாகு பெயர் **ஆ) இடவாகு பெயர்**

இ) காலவாகு பெயர் ஈ) சினையாகுபெயர்

**( விளக்கம் : வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது**

110. கீழ்க்கண்டவற்றுள் சினையாகுபெயரை குறிக்கும் தொடர் எது ?

அ) கார் அறுத்தான் **ஆ) மருக்கொழுந்து நட்டான்**

இ) மஞ்சள் பூசினாள் ஈ) வற்றல் தின்றான்

**(விளக்கம் : மருக்கொழுந்து என்னும் சினைப் பெயர் அதன் செடிக்கு ஆகிவந்தது)**

111. கீழ்க்கண்டவற்றுள் பண்பாகு பெயரை குறிக்கும் தொடர் எது ?

அ) கார் அறுத்தான் ஆ)மருக்கொழுந்து நட்டான்

**இ) மஞ்சள் பூசினாள்** ஈ) வற்றல் தின்றான்

**(விளக்கம் : மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகி வந்தது)**

112. ' கார் அறுத்தான் ' எவ்வகை ஆகுபெயர்

அ) பொருளாகு பெயர் ஆ) இடவாகு பெயர்

**இ) காலவாகு பெயர்** ஈ) சினையாகுபெயர்

**( விளக்கம் : கார் என்னும் காலப் பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது)**

113. கீழ்க்கண்டவற்றுள் தொழிலாகுபெயரை குறிக்கும் தொடர் எது ?

அ) கார் அறுத்தான் ஆ) மருக்கொழுந்து நட்டான்

இ) மஞ்சள் பூசினாள் **ஈ) வற்றல் தின்றான்**

**( விளக்கம் : வற்றல் என்னும் தொழில் பெயர் வற்றிய உணவுப் பொருளுக்கு ஆகி வந்தது.)**

114. சரியான இணையைத் தேர்ந்தெடு .

1. வானொலி கேட்டு மகிழ்ந்தனர் - கருவியாகு பெயர்
2. பைங்கூழ் வளர்ந்தது - காரியவாகு பெயர்
3. அறிஞர் அண்ணாவை படித்திருக்கிறேன் – கருத்தாவாகுபெயர்

**அ) அனைத்தும் சரி** ஆ) 1 மட்டும் சரி

இ) 2, 3 சரி ஈ) 2 மட்டும் சரி

**(விளக்கம் :**

1. **வானொலி கேட்டு மகிழ்ந்தனர் - வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது.**
2. **பைங்கூழ் வளர்ந்தது – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது .**
3. **அறிஞர் அண்ணாவை படித்திருக்கிறேன் - அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது .)**

115. தவறான இணையைத் தேர்ந்தெடு

1. ஒன்று பெற்றால் ஒளிமயம் – எண்ணலளவை ஆகுபெயர்
2. இரண்டு கிலோ கொடு – முகத்தலளவை ஆகுபெயர்
3. அரை லிட்டர் வாங்கு – எடுத்தலளவை ஆகுபெயர்
4. ஐந்து மீட்டர் வெட்டினான் – நீட்டலளவை ஆகுபெயர்

அ) அனைத்தும் **ஆ) 2, 3**

இ) 1,4 ஈ) எதுவுமில்லை

**(விளக்கம் : 2. இரண்டு கிலோ கொடு - எடுத்தலளவை ஆகுபெயர்**

**3. அரை லிட்டர் வாங்கு - முகத்தலளவை ஆகுபெயர்)**

116. கூற்று 1 : காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும் .

கூற்று 2 : வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது .

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு

இ) கூற்று 2 சரி, 1 தவறு **ஈ) கூற்று 1 சரி, 2 தவறு**

117. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்

அ) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆ) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து

இ) மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு **ஈ) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை**

118. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க

காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது.

பகலில் இயங்கும் கடைகள் நாளங்காடிகள்.

அ) காவிரியாற்றின் கழிமுகம் எதற்காக அமைந்திருந்தது ? – பகலில் இயங்கும் கடைகள் எவ்விதம் அழைக்கப்பட்டன ?

**ஆ) காவிரியாற்றின் கழிமுகம் எவ்வாறு அமைந்திருந்தது ? – பகலில் இயங்கும் கடைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன ?**

இ) காவிரியாற்றின் கழிமுகம் எங்கு அமைந்துள்ளது - பகலில் கடைகள் எவ்வாறு இயங்கின .

ஈ) காவிரியாற்றின் கழிமுகம் எதனால் அமைந்திருந்தது ? – பகலில் இயங்கும் கடைகள் எப்படி அழைக்கப்பட்டன ?

119. " மாகால் எடுத்த முந்நீர் போல் " இவ்வரிகள் எந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அ) நான்மாடக்கூடல் **ஆ) மதுரைக்காஞ்சி**

இ) புறநானூறு ஈ) அகநானூறு

120. சோழநாட்டின் தலைநகராகிய காவிரி பூம்பட்டினத்திலும், பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிலும் " கூலங் குவித்த கூல வீதிகள் “ இருந்தன எனக் கூறும் நூல் எது ?

**அ) சிலப்பதிகாரம்** ஆ) மணிமேகலை

இ) புறநானூறு ஈ) மதுரைக் காஞ்சி

121. சரியான தொடரை தேர்ந்தெடு .

அ) மலையேறிய மக்கள் மாலையின் வேகவேகமாய்க் கீழிறங்கின .

**ஆ) எங்கள் ஊர் சந்தையில் காய்கறிகள் கிடைக்கும் .**

இ) பண்டை துறைமுகங்களில் ஏற்றுமதிச் செய்யப்பட்டது.

ஈ) சிட்டுக்கு சிறகுகள் முளைத்தது .

**( விளக்கம் :**

- **மலையேறிய மக்கள் மாலையில் வேகவேகமாய்க் கீழிறங்கின .**
- **பண்டை துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்பட்டது.**
- **சிட்டுக்கு சிறகுகள் முளைத்தன .)**

122. கீழ்வருவனவற்றுள் கூலம் எனக் குறிப்பிடப்படுபவை எவை

1. நெல்லும் புல்லும் 2. வரகும் தினையும்

3. எள்ளும் கொள்ளும் 4. அவரையும் துவரையும்

5. பயறும் உளுந்தும்

**அ) அனைத்தும் சரி** ஆ) 1, 3,5

இ) 1, 2, 3 ஈ) 3, 4, 5

123. பொருத்துக.

1. கழிமுகங்கள் i) Estuaries
2. கலங்கரை விளக்கம் ii) Light house
3. துறைமுகங்கள் iii) Ports
4. பண்டமாற்றுமுறை iv) Commodity Exchange

**அ) i ii iii iv**

ஆ) iii ii i iv

இ) iv iii ii i

ஈ) iv ii i iii

124. பொருத்துக

1. இளநீர் i) Vegetable Soup
2. அகழி ii) Sugar Cane juice
3. கரும்புச்சாறு iii) Moat
4. காய்கறி வடிச் சாறு iv) Tender coconut

அ) i ii iii iv

ஆ) iii ii i iv

**இ) iv iii ii i**

ஈ) iv ii i iii

125. சரியான இணையைத் தேர்ந்தெடு .

1. நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் – முனைவர் சு. சக்திவேல்
2. தரங்கம்பாடி தங்கப் புதையல் - பெ.தூரன்
3. இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) - ச.தமிழ்ச்செல்வன்

**அ) அனைத்தும் சரி** ஆ) 2, 3 சரி

இ) 1, 3 சரி ஈ) 1, 2 சரி

126. "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு

ஐந்துசால்பு ஊன்றிய தூண் “

இக்குறளில் பயின்று வரும் அணி

அ) உவமை அணி
ஆ) எடுத்துக்காட்டுவமை அணி
**இ) ஏகதேச உருவக அணி**
ஈ) உருவக அணி

127. " ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார் "

இக்குறளில் பயின்று வரும் அணி

அ) உவமை அணி
ஆ) எடுத்துக்காட்டுவமை அணி
**இ) ஏகதேச உருவக அணி**
ஈ) உருவக அணி

128. " உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து "

இக்குறளில் பயின்று வரும் அணி

அ) உவமை அணி
ஆ) எடுத்துக்காட்டுவமை அணி
**இ) ஏகதேச உருவக அணி**
ஈ) உருவக அணி

129. பொருளுக்கேற்ற அடியை சரியாக பொருந்தியுள்ளதா என ஆராய்க.

1. கண்டானாம் தான்கண்டவாறு – தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான் .
2. அறம் நாணத்தக்கது உளடைத்து - அறம் வெட்கப்பட்ட அவனை விட்டு விலகிப் போகும் .
3. மாற்றாரை மாற்றும் படை – பகைவரையும் நட்பாக்கும் கருவி

**அ) அனைத்தும் சரி**
ஆ) 2, 3 சரி
இ) 1, 3 சரி
ஈ) 1, 2 சரி

130. ஐந்து சால்புகளில் இரண்டு _____ .

அ) வானமும் நாணமும்
**ஆ) நாணமும் இணக்கமும்**
இ) இணக்கமும் சுணக்கமும்
ஈ) இணக்கமும் பிணக்கமும்

131. அன்புநாண் ஒப்புரவு ___ வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய _____.

அ) பணிதல், படை
ஆ) பணிதல், தூண்
**இ) கண்ணோட்டம், தூண்**
ஈ) கண்ணோட்டம், படை